முதல்வர் தலைமையில் ஜூன் 29, 30–இல் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் மாநாடு

சென்னை, ஜூன் 19: சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎப்எஸ் அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு ஜூன் 29, 30–இல் நடைபெற உள்ளது.

தமிழகத்தின் சட்டம் – ஒழுங்கு நிலைமை, நிர்வாகம், நலத் திட்டங்கள் மற்றும் முதலீடுகள் ஈர்ப்பு, தொழில் வளர்ச்சி உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்க ஆண்டுதோறும் முதல்வர் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎப்எஸ் அதிகாரிகளுடனான மாநாடு நடைபெறுவது வழக்கம்.

தவெக அரசு புதிதாக பொறுப்பேற்றுள்ள நிலையில், முதல்முறையாக முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎப்எஸ் அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு சென்னை தலைமைச் செயலகத்தில் ஜூன் 29, 30–இல் நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில், மூத்த ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஐஎப்எஸ் அதிகாரிகள், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாவட்ட வன அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர்.

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு நிலைமை மோசமாக உள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

ராகுல் காந்தி பிறந்த நாள்: முதல்வர் விஜய், மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை ஜூன் 19: மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பிறந்தநாளையொட்டி, அவருக்கு தமிழக முதல்வர் ஜோசப் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஜோசப் விஜய்: ராகுல் காந்திக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துகள். நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், மக்களாட்சி மாண்புகளைக் காக்கவும் அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்துவரும் ராகுல் காந்தி நல்ல உடல் நலத்துடனும், நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறேன். அவரின் அனைத்து முயற்சிகளும் வெற்றியடையட்டும். பொது வாழ்வில் சிறப்புடன் பணியாற்றவும் வாழ்த்துகிறேன்.

மு.க.ஸ்டாலின் (திமுக தலைவர்): 'ராகுல் காந்தி நல்ல உடல் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ விழைகிறேன்' என தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் மு.க.ஸ்டாலின்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு, திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் கட்சி விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. இந்நிலையில், ராகுல் காந்திக்கு மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மதிமுக பொதுச் செயலர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உள்ளிட்ட தலைவர்களும் ராகுல் காந்திக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறியுள்ளனர்.

இரு ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்: டிஜிபி சீமா அகர்வாலுக்கு கூடுதல் பொறுப்பு

சென்னை, ஜூன் 19: தமிழக காவல் துறையில் இரு ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

தீயணைப்புத் துறை டிஜிபி சீமா அகர்வாலுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது.

இது தொடர்பாக தமிழக அரசின் உள் துறை கூடுதல் தலைமைச் செயலர் கே.மணிவாசன், வெள்ளிக்கிழமை வெளியிட்ட உத்தரவு (பழைய பதவி அடைப்புக்குள்): சந்திப் மிட்டல் – தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரிய டிஜிபி (ஆயுதப்படை டிஜிபி). ஆர்.தினகரன்–ஆயுதப்படை ஏடிஜிபி (ஊனமாஞ்சேரி தமிழ்நாடு போலீஸ் அகாதெமி ஏடிஜிபி) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல, தீயணைப்புத் துறை டிஜிபி சீமா அகர்வாலுக்கு கூடுதல் பொறுப்பாக தீயணைப்பு ஆணையத் தலைவர் பணி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே தீயணைப்பு ஆணையத் தலைவராக இருந்த ஓய்வு பெற்ற டிஜிபி சங்கர் ஜிவாலும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத் தலைவராக இருந்த ஓய்வு பெற்ற டிஜிபி சுனில்குமாரும் இரு தினங்களுக்கு முன்பு ராஜிநாமா செய்தனர் என்பது குறிப்பிடதக்கது.

3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமை செய்து கொலை

வடமாநில இளைஞரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போலீஸார்

திருவள்ளூர், ஜூன் 19: கும்மிடிப்பூண்டியில் 3 வயது பெண் குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் வடமாநில இளைஞரை 4 நாள் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்த நிலையில், 4 மணி நேரத்தில் விசாரணையை முடித்து திருவள்ளூர் போக்ஸோ நீதிமன்றத்தில் போலீஸார் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தினர்.

விசாரணைக்குப் பின் வட மாநில இளைஞரை திருவள்ளூர் போக்ஸோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போலீஸார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் கடந்த 14–ஆம் தேதி வடமாநிலத்தைச் சேர்ந்த தம்பதியின் 3 வயது குழந்தையை வடமாநிலத்தைச் சேர்ந்த பிபின் மஞ்சி (19) என்பவர் பாலியல் வன்கொடுமை செய்து புதரில் வீசினார். இதில் பலத்த காயமடைந்த குழந்தை உயிரிழந்தார். இந்த வழக்கில் பிபின் மஞ்சியை கைது செய்து கடந்த 15–ஆம் தேதி திருவள்ளூர் போக்ஸோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி உமா மகேஸ்வரி முன் பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அதையடுத்து, அவரை 15 நாள்கள், அதாவது வரும் 29–ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதைத் தொடர்ந்து அவர் சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், பிபின் மஞ்சியை காவலில் எடுத்து விசாரிக்க கும்மிடிப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் திருவள்ளூர் போக்ஸோ சிறப்பு நீதிமன்றத்தில் வியாழக்கிழமை மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை முதல் அவருக்கு தொடர்ந்து 4 நாள்கள் காவலில் எடுத்து விசாரணை மேற்கொள்ள திருவள்ளூர் போக்ஸோ நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இதைத் தொடர்ந்து, விசாரணை அதிகாரியாக திருத்தணி உள்கோட்ட உதவி காவல் துறை கண்காணிப்பாளர் சுமன் தீமான் தலைமையிலான போலீஸார் பாதுகாப்புடன், குற்றவாளியை கும்மிடிப்பூண்டியில் குழந்தை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவ இடத்துக்கும் அழைத்து சென்று, அவர் மறைத்து வைத்திருந்த கைப்பேசியையும் பறிமுதல் செய்து விசாரணை செய்தனர்.

பின்னர் கும்மிடிப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை அதிகாரி அவரிடம் விசாரித்தார். 4 மணி நேரம் விசாரணையை விடியோவாக பதிவு செய்த போலீஸார், அவரை மீண்டும் திருவள்ளூர் போக்ஸோ நீதிமன்றத்தில் நீதிபதி உமாமகேஸ்வரி முன் ஆஜர்படுத்தினர். அப்போது, நீதிபதி மீண்டும் அவரை 29–ஆம் தேதி வரை புழல் சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து அவரை புழல் மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

மேக்கேதாட்டு அணை கட்டுவதைத் தடுக்க ஜூலையில் நடைப்பயணம்

அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூன் 19: மேக்கேதாட்டில் கர்நாடகம் அணையை கட்டுவதைத் தடுக்கும் வகையில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஜூலை முதல் வாரத்தில் நடைப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

சென்னை தியாகராய நகர் தனியார் விடுதியில் தமிழ்நாடு உழவர் பேரியக்கம் சார்பில் மேக்கேதாட்டு அணை, பயிர்க் கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் பிரச்னைகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு அன்புமணி தலைமை வகித்தார். அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் உள்ளிட்ட 50–க்கும் மேற்பட்ட விவசாய சங்கப் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு உழவர் பேரியக்கம் சார்பில், மேக்கேதாட்டு அணை விவகாரம் மற்றும் பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து பாமக தலைவர் அன்புமணி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம். உடன் விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் பி.ஆர்.பாண்டியன், வேட்டவலம் மணிகண்டன், காவேரி தனபாலன், பி.கே.தெய்வசிகாமணி (ஈரோடு), ராஜேந்திரன் உள்ளிட்டோர்.

கூட்டத்தில், கூட்டுறவுக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் உள்ளிட்ட 21 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், அன்புமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேக்கேதாட்டு அணை கட்டும் கர்நாடக அரசின் முடிவுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. முல்லைப் பெரியாறு அணை பிரச்னையில் தமிழக முதல்வருடன் பேச்சு நடத்தப்போவதாக கேரள முதல்வர் கூறுவது தமிழக உரிமையைப் பாதிக்கும் என்பதால், அதை ஏற்கக் கூடாது என தீர்மானிக்கப்பட்டது. ஏரிகளை மீட்க தனிவாரியம் தேவை. பாலாற்றின் குறுக்கே 25 தடுப்பணைகள் கட்ட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மத்திய, மாநில அரசுகளுக்கு அழுத்தம் அளிக்கும் வகையிலும் வரும் ஜூலையில் தருமபுரி மாவட்டம், பில்லிக்குண்டு முதல் மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் வரை நடைப்பயணம் மேற்கொள்ளப் படவுள்ளது. மேக்கேதாட்டு பிரச்னை, பயிர்க்கடன் தள்ளுபடி குறித்து முதல்வர் விஜய்யை சந்தித்து பேசவுள்ளோம் என்றார்.

கூட்டத்தில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் வேட்டவலம் மணிகண்டன், காவேரி தனபாலன், பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திருமாவளவனுடன் ப.சிதம்பரம் சந்திப்பு

சென்னை, ஜூன் 19: விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனை காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம், வெள்ளிக்கிழமை திடீரென சந்தித்துப் பேசினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமையகமான சென்னை அசோக் நகரில் உள்ள அம்பேத்கர் திடலுக்கு வந்த ப.சிதம்பரத்தை தொல்.திருமாவளவன் வரவேற்றார்.

இந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றாலும், இருவரும் மத்திய, மாநில அரசியல் நிலவரம் குறித்து சிறிது நேரம் உரையாடியதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸுக்கு அமைச்சரவையில் இடமளித்திருக்கக் கூடாது

பாஜக

சென்னை, ஜூன் 19: காவிரியில் மேக்கேதாட்டு அணை கட்டுவதில் தமிழகத்துக்கு விரோதமாகச் செயல்படும் காங்கிரஸுக்கு அமைச்சரவையில் முதல்வர் ஜோசப் விஜய் இடமளித்திருக்கக் கூடாது என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆளுநர் உரை என்பது அரசு தயாரித்து அளிக்கும் அறிக்கையைப் படிக்கும் வகையிலே இருக்கும். ஆகவே, தமிழக அரசு தயாரித்துள்ள அறிக்கையை ஆளுநர் சட்டப்பேரவையில் வாசித்துள்ளார். தேச நலன் கருதி தமிழக அரசின் முடிவுகள் வரவேற்கத்தக்கவை. அதே நேரத்தில் மத்திய அரசுக்கும், தமிழக மக்களுக்கும் எதிராக அரசு நடவடிக்கை மேற்கொண்டால் அது கண்டிக்கத்தக்கது.

மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்டு வருகிறது. கர்நாடகத்தில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ், தமிழகத்துக்கு விரோதமாக மேக்கேதாட்டு அணையை கட்ட முயற்சிக்கிறது. தொடர்ந்து தமிழக மக்களுக்கு துரோகம் இழைத்துவரும் காங்கிரஸுக்கு முதல்வர் விஜய் தனது அமைச்சரவையில் இடமளித்திருக்கக் கூடாது. இதன்மூலம் தமிழக மக்கள் மீது முதல்வர் விஜய்க்கு அக்கறையில்லை என்பதையே காட்டுகிறது.

சட்டப்பேரவையில் தேசிய கீதம் இருமுறை பாடப்பட்டதில் தவறில்லை. முதலில் நமது நாடு, மொழி முக்கியம் என்பதை உணர வேண்டும் என்றார்.

தேசிய அமைப்பு பொதுச் செயலருடன் சந்திப்பு: பாஜக தேசிய அமைப்பு பொதுச் செயலர் பி.எல்.சந்தோஷ் சென்னைக்கு வியாழக்கிழமை வந்தார். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் சந்தித்துப் பேசியுள்ளார். வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக அவர் ஆர்.எஸ்.எஸ். முக்கிய பிரமுகர்களையும் சந்தித்துப் பேசியதாகக் கூறப்பட்டது.

மேக்கேதாட்டு அணைக்கு எதிராக தீர்மானம்: அரசியல் கட்சித் தலைவர்கள் வரவேற்பு

சென்னை, ஜூன் 19: தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தில் மேக்கேதாட்டு அணைக்கு எதிராக வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்ட தனித் தீர்மானத்தை வரவேற்று அரசியல் கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.

மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட்): மேக்கேதாட்டு அணை கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது. இதுதொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் ஜனநாயக பூர்வ அணுகுமுறையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றிய அரசுக்கும், ஆதரவு தெரிவித்த சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் பாராட்டுகள்.

டி.டி.வி.தினகரன் (அமமுக): மேக்கேதாட்டு அணைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், அதை செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதுகுறித்து மத்திய அரசுக்கு முதல்வர் ஜோசப் விஜய் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஜி.கே.வாசன் (தமாகா): மேக்கேதாட்டு அணைக்கு எதிராக தமிழக அரசு நிறைவேற்றியுள்ள தீர்மானம் தமிழக மக்களின் எண்ணங்களையும், விவசாயிகளின் எண்ணங்களையும் பிரதிபலித்துள்ளது.

கமல்ஹாசன் (மநீம): தமிழகத்தின் நீர் உரிமையையும், தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் மேக்கேதாட்டு விவகாரத்தில் அரசியல் மனமாச்சரியங்களை ஒதுக்கிவிட்டு, அனைவரும் ஓரணியாக நின்று ஆதரவு தெரிவித்த சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு பாராட்டுகள்.

க.கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்): சுமார் 10 ஆண்டுகளாக நீடித்து வரும் மேக்கேதாட்டு பிரச்னைக்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண முயற்சி செய்ய வேண்டும். இதுகுறித்து சட்டப்பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு ஆதரவு அளிக்கிறோம்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
மண்டல அலுவலகம், சென்னை

நகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் 12 மாதத்தவணை 30.04.2025, 6 மாதத் தவணை 31.10.2025 வரை ஈடு வைக்கப்பட்டு காலவரையறை முடிந்தும் திருப்பப்படாத நகைகள் கெடு முடிவடைந்துள்ளது. மேற்படி நகைக் கடன்களுக்கு உரிய கடன்தாரர்களுக்கு சாதாரண தபால் மற்றும் ஆக அங்கீகாரம் பெற்ற ஏஜெண்டர் மூலமாக பதிவு தபால் அனுப்பியும் ஈடு வைக்கப்பட்டுள்ள நகைகளை மீட்கவோ அல்லது கடன்களை புதுப்பிக்கவோ இல்லை. அதனால் சம்பந்தப்பட்ட கடன்களுக்கு உரிய ஈடு வைக்கப்பட்ட நகைகளை நிறுவனத்தின் விதிப்படி கீழ்க்கண்ட விவரப்படி ஏலம் விடப்படும். நகை அடகு வைத்தவர் இறந்திருந்தாலும், வெளியூர் சென்றிருந்தாலும் இந்த அறிவிப்பு அவர்கள் வாரிசுக்கும் பொருந்தும். பதிவு தபால் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்திற்கு வரும் பாக்கெட்டுகளில் குறிப்பிட்ட பாக்கெட்டுகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும் மேலும் வேறு தேதியில், வேறு இடத்தில் ஏலத்தை நடத்தவும் நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

ஏலதேதி: 30.06.2026 | நேரம்: மதியம் 2.00 மணி | ஏலம் நடைபெறும் இடம்: 15/2 நாடார், R S மூர்ஸில் மண்டி காம்ப்ளக்ஸ், திருப்பத்தூர் - 635601 | நகையை மீட்க கடைசி தேதி: 29.06.2026

நகை கடன் எண். – ABUR2PJ2501250001 ABUR2PJ2506240001 ABUR2PJ2506300005 ABUR2PJ2507170001 ABUR2PJ2507240001 ABUR2PJ2507210001 ABUR2PJ2507010001 ABUR2PJ2501250001 ABUR2PJ2507260003 ABUR2PJ2507260002 VMBDIP2305080008 VMBDIP2402120004 VMBDIP2404260002 VMBDIP2404250002 VMBDIP2404240002 VMBDIP2312010005 VMBDIP2407110002 VMBDIP2407110002

ஏலதேதி: 30.06.2026 | நேரம்: காலை 11.00 மணி | ஏலம் நடைபெறும் இடம்: எண்.244/147, P K G காம்ப்ளக்ஸ், முதல் தளம், தேரடி சௌக், குடியாத்தம்-632 602 | நகையை மீட்க கடைசி தேதி: 29.06.2026

நகை கடன் எண். – GYDM2PJ2412070006 GYDM2PJ2503060007 GYDM2PJ2503120009 GYDM2PJ2503130003 GYDM2PJ2503080006 GYDM2PJ2503140004 GYDM2PJ2503100005 GYDM2PJ2503180005 GYDM2PJ2503100006 GYDM2PJ2502260008 GYDM2PJ2503240003 GYDM2PJ2503250007 GYDM2PJ2503070005 GYDM2PJ2503200005 GYDM2PJ2504200001 GYDM2PJ2504040003 GYDM2PJ2504120004 GYDM2PJ2504120006 GYDM2PJ2504170001 GYDM2PJ2504170002 GYDM2PJ2504020011 GYDM2PJ2504020010 GYDM2PJ2504110010 GYDM2PJ2504110009 GYDM2PJ2504170008 GYDM2PJ2504070004 GYDM2PJ2504250004 GYDM2PJ2504170004 GYDM2PJ2504300002 GYDM2PJ2504250003 GYDM2PJ2505100008 GYDM2PJ2505100006 GYDM2PJ2505100007 GYDM2PJ2505030009 GYDM2PJ2505030008 GYDM2PJ2505030009 GYDM2PJ2505020007 GYDM2PJ2505030004 GYDM2PJ2505150007 GYDM2PJ2505240007 GYDM2PJ2505240008 GYDM2PJ2505240009 GYDM2PJ2505240011 GYDM2PJ2505270010 GYDM2PJ2505270011 GYDM2PJ2505270008 GYDM2PJ2505190005 GYDM2PJ2505270009 GYDM2PJ2505110002 GYDM2PJ2505110003 GYDM2PJ2505110004 GYDM2PJ2505110005 GYDM2PJ2505110006 GYDM2PJ2505110007 GYDM2PJ2505180001 GYDM2PJ2505180002 GYDM2PJ2505210008 GYDM2PJ2505030011 GYDM2PJ2505120007 GYDM2PJ2505070008 GYDM2PJ2505070009 GYDM2PJ2505150005 GYDM2PJ2505150006 GYDM2PJ2505020001 GYDM2PJ2506210014 GYDM2PJ2506210013 GYDM2PJ2506180008 GYDM2PJ2506180009 GYDM2PJ2506030005 GYDM2PJ2506030007 GYDM2PJ2506060003 GYDM2PJ2506060004 GYDM2PJ2506060005 GYDM2PJ2506020010 GYDM2PJ2506240005 GYDM2PJ2506240006 GYDM2PJ2506240004 GYDM2PJ2506130007 GYDM2PJ2506020011 GYDM2PJ2506170001 GYDM2PJ2506130001 GYDM2PJ2506170002 GYDM2PJ2506130002 GYDM2PJ2506130003 GYDM2PJ2506270001 GYDM2PJ2506200003 GYDM2PJ2506260004 GYDM2PJ2506120015 GYDM2PJ2506120016 GYDM2PJ2506070003 GYDM2PJ2506100005 GYDM2PJ2506120009 GYDM2PJ2506120014 GYDM2PJ2507030012 GYDM2PJ2507190010 GYDM2PJ2507240003 GYDM2PJ2507050002 GYDM2PJ2507090003 GYDM2PJ2507080007 GYDM2PJ2507040007 GYDM2PJ2507040006 GYDM2PJ2507160004 GYDM2PJ2507230006 GYDM2PJ2507230007 GYDM2PJ2507280011 GYDM2PJ2507280012 GYDM2PJ2507280014 GYDM2PJ2507280010 GYDM2PJ2507150006 GYDM2PJ2507150007 GYDM2PJ2507080008 GYDM2PJ2508290001 GYDM2PJ2508230015 GYDM2PJ2508130010 GYDM2PJ2508130011 GYDM2PJ2508130012 GYDM2PJ2508280014 GYDM2PJ2508230006 GYDM2PJ2508280006 GYDM2PJ2508280005 GYDM2PJ2508230011 GYDM2PJ2508010006 GYDM2PJ2508010007 GYDM2PJ2508010010 GYDM2PJ2508120010 GYDM2PJ2508140008 GYDM2PJ2510180008 GYDM2PJ2510210002 GYDM2PJ2510250008 GYDM2PJ2510140004 GYDM2PJ2510160010 GYDM2PJ2509290004 GYDM2PJ2509090013 GYDM2PJ2509050002 GYDM2PJ2509100012 GYDM2PJ2509010013 GYDM2PJ2509100014 GYDM2PJ2510100014 GYDM2PJ2510170002 GYDM2PJ2510080008 GYDM2PJ2509180006 GYDM2PJ2509060008 GYDM2PJ2509060009 GYDM2PJ2509090007 GYDM2PJ2510160013 GYDM2PJ2509300005 GYDM2PJ2510230009 GYDM2PJ2509200008 GYDM2PJ2510170003 GYDM2PJ2510100001 GYDM2PJ2510220002 GYDM2PJ2510090003 GYDM2PJ2510230002 GYDM2PJ2510130003 GYDM2PJ2510280001 GYDM2PJ2510240003 GYDM2PJ2509110005 GYDM2PJ2509110006 GYDM2PJ2510130001 GYDM2PJ2510180017 GYDM2PJ2510210003 GYDM2PJ2509250009 GYDM2PJ2509100004 GYDM2PJ2509230011 GYDM2PJ2510210004 GYDM2PJ2510160008 GYDM2PJ2510270011 GYDM2PJ2510250012 GYDM2PJ2509250005 GYDM2PJ2509230002 GYDM2PJ2509240001 GYDM2PJ2509240002 GYDM2PJ2509230001 GYDM2PJ2509180001 GYDM2PJ2509180002 GYDM2PJ2510060002 GYDM2PJ2510040001 GYDM2PJ2509150006 GYDM2PJ2510270002 GYDM2PJ2510290003 GYDM2PJ2509200006 GYDM2PJ2510220005 GYDM2PJ2510220006 GYDM2PJ2509130007 GYDM2PJ2509190005 GYDM2PJ2509130005 GYDM2PJ2509130006 GYDM2PJ2510230004 GYDM2PJ2510240008 GYDM2PJ2509180009 GYDM2PJ2509230010 GYDM2PJ2509250003 GYDM2PJ2510060008 GYDM2PJ2509160001 GYDM2PJ2509270004 GYDM2PJ2509280003 GYDM2PJ2510180014 GYDM2PJ2510180015 GYDM2PJ2510230006 GYDM2PJ2510270003 GYDM2PJ2510270007 GYDM2PJ2510170006 GYDM2PJ2510250007 GYDM2PJ2509180003 GYDM2PJ2509220001 GYDM2PJ2509160008 GYDM2PJ2510040002 GYDM2PJ2509230008 GYDM2PJ2509300001 GYDM2PJ2510110001 GYDM2PJ2510180013 GYDM2PJ2510100013 GYDM2PJ2510180006 GYDM2PJ2509300007 GYDM2PJ2510040008 GYDM2PJ2510220007 GYDM2PJ2510220008 GYDM2PJ2509060007

ஏலதேதி: 30.06.2026 | நேரம்: காலை 11.00 மணி | ஏலம் நடைபெறும் இடம்: 122A, 2வது தளம், விக்னேஷ் போட்டார் பில்டிங், MBT ரோடு, ராணிப்பேட்டை, வேலூர்-632401 | நகையை மீட்க கடைசி தேதி: 29.06.2026

நகை கடன் எண். – NMTKMP2510110002

ஏலதேதி: 30.06.2026 | நேரம்: காலை 11.00 மணி | ஏலம் நடைபெறும் இடம்: மனை எண்.1, வேலூர் II கிளை, சின்ன சங்கரன்பாளையம், வேலூர்-632001 | நகையை மீட்க கடைசி தேதி: 29.06.2026

நகை கடன் எண். – TKVKUPJ2311230001 PRNBTP2502240002

கடன் பெற்றவர் கடன் எண், பெயர், விலாசம், நகைகளின் விபரம், நகை ஈடு வைத்த கிளையின் அறிவிப்பு பலகையில் காணலாம். விளம்பர செலவு தனியே வசூல் செய்யப்படும். முன் அறிவிப்பு இன்றி ஏலத்தை ரத்து செய்யவோ அல்லது ஏல தேதியை மாற்றி வைக்கவோ நிறுவனத்திற்கு உரிமை உண்டு. மேற்கண்ட நகைகளை அடகு வைத்தவர் மேற்கூறிய தேதி மாலை 3.00 மணிக்குள் அசல், வட்டி, ஏலச்செலவு, விளம்பரச்செலவுகளை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம்) கட்டியவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பான் கார்டு மற்றும் அட்ரஸ் புரூப் கொடுக்க வேண்டும்.

தேதி: 20.06.2026 குறிப்பு: மேலே குறிப்பிட்டுள்ள தேதியில் நடைபெற இருந்த ஏலம் தவறாம் பட்சத்தில் மறு ஏலம் 07.07.2026 அன்று நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏலதாரர் இப்படிக்கு
குருசாமி, சைதாப்பேட்டை, சென்னை பொது மேலாளர் (நகைக்கடன்), அடையார், சென்னை-20

JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
JM Financial
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை - IV-A பிணைய நலன் (அமலாக்க)2002 இன் விதிகள், விதி 9(1) [விதி 8(6) காண்க],

கடனீட்டு சொத்துக்கள் சொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்கள் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சொத்து வாரிசுகளும் பிணைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை பின்னது ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அ.மானதாரர்(கள்), இணைகடன்தாரர்(கள்), அ.மானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எங்கிருப்பினும் சொத்து கீழுள்ளவாறு பேங்க் லிமிடெட் வங்கியின் (முதல்கடனீ) செந்தரம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்சியாக JMFARC-யிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) EB சீரிஸ் 2025 - டிரஸ்ட் ("பிணைக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்திற்குரியவர். JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்டரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அமலாக்கம், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அந்த நிலையில்" என்று அடிப்படையில் வங்கியின் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் வைப்புகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அ.மானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிலுவை விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப